**சுருக்கம்**

மறுவாழ்வு – அயலகத் தமிழர் நலன் – தமிழ்நாடு அரசின் 06.10.2021 நாளிட்ட செய்தி வெளியீடு – "வெளிநாட்டிற்குச் செல்லும் குறைந்த வருவாய் பிரிவைச் சேர்ந்த தமிழர்கள் பணியின்போது இறக்க நேரிட்டால் அவர்கள் குடும்பத்தில் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்படும்" என்ற திட்டத்தை நடைமுறைப்படுத்த அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையருக்கு நிர்வாக அனுமதி அளித்து – ஆணை– வெளியிடப்படுகிறது.

---

**பொது(மறுவாழ்வு.2)த் துறை**

**அரசாணை(நிலை)எண்.515** **நாள்.18.08.2023.**

சோப கிருது வருடம், ஆவணி –1
திருவள்ளுவர் ஆண்டு–2054
படிக்கப்பட்டது:

1 தமிழ்நாடு அரசின் செய்தி வெளியீடு எண்.842, நாள் 06.10.2021.
2 அரசு கடித எண்.4022/ம.வா.2(2)/2023–1, நாள் 03.05.2023.
3 அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரின் கடித ந.க.எண்.இ1/7171/2018, நாள் 09.06.2023.

*****

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட செய்தி வெளியீட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளிநாடு வாழ் தமிழர்களின் நலன் காக்க அறிவித்த பல்வேறு நலத்திட்டங்களுள் கீழ்க்காணும் அறிவிப்பும் அடங்கும்:–

**"வெளிநாட்டிற்குச் செல்லும் குறைந்த வருவாய் பிரிவைச் சேர்ந்த தமிழர்கள் பணியின்போது இறக்க நேரிட்டால் அவர்கள் குடும்பத்தில் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு, கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை வழங்கப்படும்".**

த.பி.பா..

2. மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பிற்கு செயல்வடிவம் கொடுக்கும் முகமாக, மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் மேற்காணும் திட்டத்தினை செயல்படுத்துவதற்காக உரிய திருத்திய கருத்துரு அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரிடம் கோரப்பட்டது.

3. மேலே, மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் அவர்கள் பிற நல வாரியங்களில் ஒன்றான தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் கல்வி உதவித்தொகை திட்டத்தின் அடிப்படையில் கீழ்கண்ட கருத்துருவினை அரசிற்கு சமர்ப்பித்துள்ளார்:-

**அ. நோக்கம்**:

அயல்நாடுகளுக்கு பணியின் பொருட்டு சென்று அங்கு இறக்கும் குறைந்த வருவாய் பிரிவைச் சேர்ந்த தமிழர்களின் குடும்பத்திலுள்ள கல்வி பயிலும் மாணவர்களுக்கு கல்விக்கான சிறந்த வாய்ப்புகளை வழங்குவதற்கும், உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் அவர்களின் விகிதத்தை அதிகரிப்பதற்கும், கல்வியில் அவர்களின் ஆர்வத்தினை அதிகரிப்பதுமே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

**ஆ. பயன்கள்:**

தமிழ்நாட்டில், பள்ளி மற்றும் கல்லூரி / பல்கலைக்கழகம் / நிறுவனத்தில் படிப்பதற்காக உதவித்தொகை வழங்கப்படும். இது பாலிடெக்னிக் (Polytechnic} / தொழில்துறை பயிற்சி நிறுவனங்கள் / தேசிய தொழிற்பயிற்சி கவுன்சிலுடன் இணைக்கப்பெற்ற தொழில் பயிற்சி மையங்கள் ஆகியவற்றில் உள்ள பட்டப்படிப்பு மட்டத்தில் உள்ள வகுப்புகளுக்கும் இது பொருந்தும்.

**இ. தகுதி:**

தமிழ்நாடு அரசின் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று அல்லது அயல்நாடுகளில் அதற்கு இணையான படிப்புகளில் தேர்ச்சி பெற்ற 11 ஆம் மற்றும் 12 ஆம் வகுப்பு சேர்க்கை பெற்ற மாணவர்கள், மருத்துவக் கல்லூரி படிப்பு / பொறியியல் பட்டப்படிப்பு / வேளாண்மை பொறியியல் (Agri. Eng) மற்றும் ஏதேனும் ஒரு துறை டிப்ளமோ படிப்பு ஏதேனும் ஒரு துறையில் அல்லது அதற்கு இணையான படிப்புகள்; அரசு அங்கீகாரம் பெற்ற கல்லூரிகள் மூலம் தொழிற்கல்விப் படிப்புகள் / பாலிடெக்னிக்குகள் (Polytechnic) / தொழில் பயிற்சி நிறுவனங்களில் சேர்க்கை (Admission) பெற்ற மாணவர்கள் மட்டுமே இக்கல்வி உதவித் தொகைக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

**ஈ. கால அளவு:**

முழு பாடத்திட்டத்திற்குமான கால அளவிற்கும் உதவித் தொகை வழங்கப்படும்.

**உ. உதவித்தொகை விகிதம்:**

அயல்நாடுகளுக்கு பணியின் பொருட்டு சென்று அங்கு 'இறக்கும் குறைந்த வருவாய் பிரிவைச் சேர்ந்த தமிழர்களின் குடும்பத்திலுள்ள மகன் / மகளுக்கு கீழ்க்கண்டவாறு கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

| வ. எண் | பாடப்பிரிவு | உதவித்தொகை ரூ. |
|---|---|---|
| 1 | 11 மற்றும் 12 – ஆம் வகுப்பு (மேல்நிலைக் கல்வி) | 4000 |
| 2 | தொழிற் பயிற்சி கல்வி | |
| 3 | பொறியியல் பட்ட மேற்படிப்பு | 12000 |
| 4 | மருத்துவ பட்ட மேற்படிப்பு | |
| 5 | சட்ட பட்ட மேற்படிப்பு | |
| 6 | விவசாய பட்ட மேற்படிப்பு | |
| 7 | ஆசிரியர் பயிற்சி பட்ட மேற்படிப்பு | |
| 8 | உடற்பயிற்சி கல்வி பட்ட மேற்படிப்பு | |
| 9 | பொறியியல் பட்டப்படிப்பு | 8000 |
| 10 | மருத்துவ பட்டப்படிப்பு | |
| 11 | சட்டப் பட்டப்படிப்பு | |
| 12 | விவசாய படிப்பு | |
| 13 | ஆசிரியர் பயிற்சி பட்டப்படிப்பு | |
| 14 | உடற்பயிற்சி கல்வி பட்டப்படிப்பு | |
| 15 | பொறியியல் பட்டயப் படிப்பு | 5000 |
| 16 | மருத்துவப் பட்டயப் படிப்பு | |
| 17 | ஆசிரியர் பயிற்சி பட்டயப் படிப்பு | |
| 18 | உடற்பயிற்சி கல்வி பட்டயப் படிப்பு | |

**ஊ. உதவித்தொகைக்கான நிபந்தனைகள்**:

i. அயலகத் தமிழர் நலவாரியத்தில் பதிவு பெற்று. பதிவு காலாவதியாகாமல் உள்ள (இறப்பின் போது) அயலகத் தமிழரின் குழந்தைகளுக்கு வழங்கப்படும்.

ii. முறையான வேலை வாய்ப்பு ஆவணங்களுடன் அயல்நாடுகளில் பணிபுரிந்து மரணமடைந்த தமிழர்களின் குழந்தைகளுக்கு தமிழ்நாட்டில் உள்ள கல்வி நிறுவனங்களில் கல்வி பயிலும் நிலையில் அம்மாணவர்களுக்கு மட்டுமே உதவித்தொகை வழங்கப்படும்.

iii. சான்றிதழ் / பட்டம் பெற தேவைப்படும் சாதாரண காலத்திற்கு மேல் உதவித்தொகை வழங்கப்படாது.

iv. ஒரு குடும்பத்தில் இரண்டு மாணவர்களுக்கு மேல் உதவித்தொகை வழங்கப்படாது.

v. கல்லூரி / பல்கலைக்கழகம் / நிறுவனத்தினால் தீர்மானிக்கப்படும் வருகையினை அளவுகோலை மாணவர்கள் தவறாமல் பெற்றிருக்க வேண்டும்.

vi. மாணவர் உதவித்தொகைக்கான விதிமுறைகள் அல்லது நிபந்தனைகளை மீறியிருந்தால், அவர்களுக்கான உதவித்தொகை வழங்குவது இடைநிறுத்தப்படலாம் அல்லது ரத்துசெய்யப்படலாம் மற்றும் இது தொடர்பான அயலகத் தமிழர் நல வாரியத்தின் முடிவே இறுதியானது.

vii. ஒரு மாணவர் தவறான அறிக்கை / சான்றிதழ்கள் மூலம் உதவித்தொகை பெற்றிருப்பது கண்டறியப்பட்டால், அவரது உதவித்தொகை உடனடியாக ரத்து செய்யப்படும் மற்றும் செலுத்தப்பட்ட உதவித்தொகை திரும்பப் பெறப்படும்.

viii. தகுதியுடைய மாணவர்களுக்கு உதவித் தொகையினை வழங்குவதற்கு தேவையான விரிவான நடைமுறை வாரியத்தினால் வகுக்கப்படும்.

**எ. உதவித்தொகைக்கான கால அளவு**

இக்கல்வி உதவித்தொகை திட்டம், 2023-24-ஆம் கல்வி ஆண்டு முதல் வழங்கப்படும். விதிமுறைகளின்படி, 2023-24-ஆம் கல்வி ஆண்டில் இரண்டாம் ஆண்டு, மூன்றாம் ஆண்டு, நான்காம் ஆண்டு, ஐந்தாம் ஆண்டு போன்ற படிப்புகளில் படிக்கும் மாணவர்களும் உதவித்தொகைக்கு தகுதியுடையவர்கள்.

**ஏ. கல்வி உதவித்தொகை செலுத்தும் முறை**

1 இத்திட்டத்தின் கீழ் அனைத்து கட்டணங்களும் பயனாளியின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படும். இதற்காக மாணவர்கள் ஏதேனும் ஒரு அரசு அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் வங்கி கணக்கைத் தொடங்க வேண்டும்.

2 இக்கல்வி உதவித் தொகை அயலகத் தமிழர் நல வாரியம் மூலமாக வழங்கப்படும். அயலகத் தமிழர் நல வாரியத்தின் நிதி கையிருப்பு போதுமான அளவு வரும் வரை, தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கையில், இக்கல்வி உதவித்தொகைக்கு தேவையான நிதி இவ்வாணையரகம் வாயிலாக பெற்று, பயனாளிகளுக்கு நேரடியாக அவர்களது வங்கி கணக்கில், துறையின் வாயிலாக வழங்கப்படும்.

4. மேலும் இத்திட்டம் குறித்து அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறையின் ஆணையர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 6.10.2021-ஆம் நாளிட்ட செய்தி வெளியீடான "பணியின் பொருட்டு அயல்நாடுகளுக்கு சென்று அங்கு இறக்கும் குறைந்த வருவாய் பிரிவைச் சேர்ந்த தமிழர்களின் குடும்பத்திலுள்ள கல்வி பயிலும் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படும்" என்ற திட்டத்தினை செயல்படுத்துவதற்கு ஏதுவாக உரிய நிருவாக அனுமதி வழங்கி அரசாணை வெளியிட அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் அவர்களின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்தபின், அதனை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 06.10.2021 நாளிட்ட செய்தி வெளியீட்டில் (செய்தி வெளியீடு எண்.842) அறிவிக்கப்பட்டுள்ள, "வெளிநாட்டிற்குச் செல்லும் குறைந்த வருவாய் பிரிவைச் சேர்ந்த தமிழர்கள் பணியின்போது இறக்க நேரிட்டால் அவர்கள் குடும்பத்தில் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு, கல்வி உதவித் தொகை வழங்கப்படும்" என்ற திட்டத்தினை மேலே பத்தி 3-ல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு செயல்படுத்துவதற்கு அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையருக்கு நிருவாக அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

6. இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு தேவைப்படும் நிதியை கணக்கிட்டு அதன் பின்னர் அதற்கான ஒதுக்கீட்டினை கோரி உரிய கருத்துருவை அரசிற்கு அனுப்பிவைக்குமாறு அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை நிதி(பொது)த் துறையின் அ.சா.எண்.4022/நிதி(து.செ./வ.செ.பொ.II)/2023, நாள்.07.08.2023 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**க. நந்தகுமார்**
**அரசுச் செயலாளர்**

பெறுநர்
ஆணையர்,
அயலக தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை-5.
முதன்மைச் செயலாளர்,
நிதித்துறை, சென்னை - 600 009.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-8.

த.பி.பா..

நகல்

மாநில கணக்காயர், சென்னை-18.

சிறப்பு நேர்முக உதவியாளர்,

மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும்

வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அலுவலகம், சென்னை-9.

சிறப்பு நேர்முகக் உதவியாளர்,

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் அலுவலகம்

நிதி(பொது/வ.செ.பொ.I/II/வ.வ.I)த் துறை, சென்னை-9.

பொது(ம.வா.I/III)த் துறை, சென்னை-9.

பொது(அ.ந.மு.1)த் துறை, சென்னை-9.

பொது(பல்வகை)த் துறை, சென்னை-9.

உள்ளுறை தணிக்கை அலுவலர், சென்னை - 9.

இ.கோ/உ.திரி.

**//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//**

18/8/2023

**பிரிவு அலுவலர்**

18/8/23